**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 17/2023**

**2025ம் வருடம் நவம்பர் மாதம் 7 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**எ.ம.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு. பிச்சைமுத்து என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ராஜேந்திரன்** | த/பெ | **மூக்கன்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் தவத்தாரேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பேரில் நான் இன்று ஆஜராகியுள்ளேன். எனது ஓட்டுனர் உரிமம் சுய சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.1. இந்த விபத்து ஆட்டோ ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது.

**குறுக்கு விசாரணை :–**

இந்த விபத்து சம்மந்தமாக திருப்புவனம் காவல் நிலையத்தில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் நான் திருப்புவனம் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டு அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்பதால் தான் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. மனுதாரர் பயணம் செய்த ஆட்டோ ஓட்டுனரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை